செ.வெ.எண்-22 நாள்-13.08.2021

# அரியலூர் மாவட்டம்
# இணைய வழி மூலம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகமாக இருப்பதால் 144 தடை உத்தரவு அமலில் உள்ள காரணத்தினால் விவசாயிகள் குறைதீர்ப்புக் கூட்டம் இணைய வழியாக (Google Meet) மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (13.08.2021) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது,**

அரியலூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 954 மி.மீ ஆகும். நடப்பு ஆண்டில் இம்மாதம் இது நாள் வரை 493.83 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு தேவையான 1035 மெ.டன் யூரியா, 996 மெ.டன் டி.ஏ.பி 759 மெ.டன் பொட்டாஷ் மற்றும் 2772 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை மையங்களில் இருப்பில் உள்ளது. இதுவரை சான்று பெற்ற நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் மூலம் 45 மெ.டன், தனியார் விதை விற்பனை மையங்கள் மூலம் 126 மெ.டன் என கூடுதலாக 171 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது வேளாண்மை விரிவாக்க மையங்களில் 222 மெ.டன் நெல் விதைகள் கையிருப்பில் உள்ளது.

**மானிய விலையில் நுண்ணீர் பாசனத் திட்டம்:** தற்போது பருவமழை குறைவாக கிடைத்து வருவதால் நிலத்தடி நீரின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. அதற்கு ஏற்றாற் போல் வேளாண் துறையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. நிலத்தடி நீரை சிக்கனமாக பயன்படுத்தி சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கோடு வேளாண்துறை மற்றும் தோட்டக்கலைத்துறைகள் மூலம் சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர் பாசன கருவிகளை அமைக்க விவசாயிகளுக்கு அரசு மானியமாக நமது மாவட்டத்திற்கு ரூ.7.92 கோடி நிதி இலக்கு ஒதுக்கீடு செய்து பெறப்பட்டுள்ளது.

சிறு/குறு ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் பாசன கருவிகளை தங்களது வயல்களில் நிர்மானித்துக்கொள்ள மானியம் அனுமதிக்கப்பட்டு வருகிறது. 75 சதவீத மானியத்தில் பயன்பெறும் இதர விவசாயிகள் மீதிப் பங்குத் தொகையை வங்கி வரைவோலையாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். சிறு/குறு ஆதிதிராவிட விவசாயிகள் வருவாய்த்துறையில் சான்று பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயன்பெற்றிட சொந்த நிலத்தில் பயிர் சாகுபடி செய்து வருவதற்கான சிட்டா மற்றும் அடங்கல், வயல் வரைபடம் மற்றும் மின் இணைப்புடன் நீர் ஆதாரம் உள்ளமைக்கான சான்றுகளுடன் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற இதர ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகி விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் விவசாய சங்க பிரதிநிதிகள் இணைய வழியாக தங்களது கைப்பேசி மூலமும், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் மூலமும் மற்றும் அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் உள்ள பொது சேவைமையங்களில் கலந்துகொண்டு வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, பொதுப்பணித்துறை, வேளாண் பொறியியல் துறை, ஊரக வளர்ச்சித்துறை, மின்சாரத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் கூட்டுறவுத்துறை தொடர்பான கோரிக்கைகளை அளித்தார்கள். மேலும் நீண்ட இடைவெளிக்குப்பிறகு கொரோனா காலத்தில் ஆன்லைன் மூலம் நடத்தப்படும் குறைதீர்க்கும் நாள் புதுமையான அனுபவமாகவும் எவ்வித இடர்பாடுகள் இன்றி குறைகளை தெரிவிக்க முடிந்ததாவும் கூறினார்கள். மேலும் சம்மந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு துறை அலுவலர்கள் இணையவழியாக பதிலுரை அளித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், வேளாண்மை இணை இயக்குநர் இரா.பழனிசாமி, துணை இயக்குநர் ப.பழனிசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சு.சண்முகம், தோட்டக்கலை துணை இயக்குநர் ஆனந்தன், செயற்பொறியாளர் (பொ.ப.து) ஆசைத்தம்பி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**